செ.வெ.எண்: 300 24.5.2011

## செய்தி

### மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி ஜூன் 1ஆம் தேதி முதல் நியாயவிலைக் கடைகளில் இலவச அரிசி வழங்கப்படும். கூட்டுறவுத்துறையின் உயர் அலுவலர்கள் கூட்டத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கா. ராஜு அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுரை

*********

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கா. ராஜு அவர்கள் தலைமையில் கூட்டுறவுத்துறையின் உயர் அலுவலர்கள் கூட்டம் 24.5.2011 அன்று, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றியதாவது:

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 16.5.2011 அன்று பதவியேற்ற உடனே அரிசி பெற தகுதியுடைய குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் இலவச அரிசி வழங்கப்படும் என ஆணையிட்டார்கள். இலவச அரிசி அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் ஜூன் 1ஆம் தேதி முதல் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு வழங்கப்படும் இலவச அரிசியை குடும்ப அட்டைதாரர்களுக்கு தக்க ஏற்பாடுகளுடன் எவ்விதப் பிரச்சனைகளும் இன்றி வழங்கப்படவேண்டும். அவ்வாறு வழங்கப்படும் அரிசி தரமானதாகவும், எடை குறைவின்றி வழங்கிட அலுவலர்கள் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தவறுகள் ஏற்படாத வகையில் அந்தந்த மண்டல இணைப்பதிவாளர்கள் தகுந்த முன்நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். இலவச அரிசியை குடும்ப அட்டைதாரர்கள் அவர்களின் வசதிக்கு ஏற்ப மாதத்தின் அனைத்து வேலை நாட்களிலும் நியாயவிலைக் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், அனைத்து நியாயவிலைக் கடைகளும் நாள்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் திறக்கப்படுகின்றனவா என அலுவலர்கள் காலையிலேயே நேரடியாக சென்று ஆய்வு மேற்கொள்வதுடன், நியாயவிலைக் கடைப் பணியாளர்கள் கடையின் பெயர் பலகையில் இருப்பு விவரப் பட்டியலை நாள்தோறும் பொதுமக்கள் அறியும்வண்ணம் எழுதிவைக்கின்றனரா என கண்காணிக்க வேண்டும். நியாயவிலைக் கடைப் பணியாளர்களும் தவறுகளுக்கு இடமளிக்காமல் சேவை மனப்பான்மையுடன் பணியாற்றிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பயிர்க்கடன் பெறுபவர்கள் அக்கடனை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்திட உறுதி செய்திடும் வகையில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும். மேலும், கூட்டுறவுச் சிறப்பங்காடிகளில் விற்பனைச் செய்யும் பொருட்களின் விலையானது வெளிச்சந்தையில் விற்பனை செய்யும் விலையைவிட குறைவாக உள்ளதால் உரிய விளம்பரம் மேற்கொண்டு பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அதிக அளவில் விற்பனை செய்திட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

கூட்டுறவு மருந்தகங்களில் விற்பனை செய்யப்படும் மருந்துகளுக்கு 12 சதவிகிதம் கமிஷன் தருவதால் விற்பனை அதிகரித்துள்ளநிலையில் அதிகளவில் கூட்டுறவு மருந்தகங்களை தொடங்கி நடத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.யத்தீந்திர நாத் ஸ்வேன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திருமதி வே.அமுதவல்லி, இ.ஆ.ப., திரு.ந.அசோகன், திரு.க.பு.பெ.பன்னீர்செல்வன், திரு.க.மா. தமிழரசன், திரு.இரா.ராஜேந்திரன், திரு.அ.சங்கரலிங்கம், திரு.எம்.தர்மலிங்கம், திரு.இரா.ஜெயராம், திரு.ஆர்.கார்த்திகேயன் திரு.எம்.பி.சிவனருள் மற்றும் மண்டல இணைப்பதிவாளர்கள், மத்திய கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்கள், மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் தனி அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி ஜூன் 1ஆம் தேதி முதல் நியாயவிலைக் கடைகளில் இலவச அரிசி வழங்கப்படுவதையொட்டி மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜூ அவர்கள் தலைமையில் உயர்அலுவலர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.யத்தீந்திர நாத் ஸ்வேன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திருமதி வே.அமுதவல்லி, இ.ஆ.ப., திரு.ந.அசோகன், திரு.க.பு.பெ.பன்னீர்செல்வன், திரு.க.மா. தமிழரசன், திரு.இரா.ராஜேந்திரன், திரு.அ.சங்கரலிங்கம், திரு.எம்.தர்மலிங்கம், திரு.இரா.ஜெயராம், திரு.ஆர்.கார்த்திகேயன் திரு.எம்.பி.சிவனருள் மற்றும் மண்டல இணைப்பதிவாளர்கள், மத்திய கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்கள், மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் தனி அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு, இயக்குநர்,**
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**சென்னை -9**